## இலங்கைத் துறைமுக அதிகாரசபை

### அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் பதவிக்கு வேண்டப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**பதவி : பிரத்தியேக செயலாளர் – JLM**

**1 (அ) தகுதித்திறன்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்று மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழில் சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பிரத்தியேக செயலாளர் பணி தொடர்பான டிப்ளோமா / ஆங்கில டிப்ளோமா (டிப்ளோமா கால எல்லை குறைந்தது ஒரு (01) வருடமாக இருத்தல் வேண்டும்.)

**அத்துடன்**

**அனுபவம்**

அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் பிரத்தியேக செயலாளர் பதவியில் ஐந்து (05) வருட அனுபவம்

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு: : 5 : 0 (JLM)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 75,065/=
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1,440/=

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக ரூ. 170,000 அளவினதாக இருக்கும்.

**குறிப்பு 1**

கடிதங்கள் தயாரித்தல், அறிக்கைகள் வரைவு செய்தல் அத்துடன் ஆங்கில மற்றும் சிங்கள மொழியினை சிறப்பாக கையாளும் ஆற்றல் மற்றும் ஏனைய சகல செயலாளர் பணி தொடர்பான நடவடிக்கைகளையும் சுயமாக மேற்கொள்ளும் ஆற்றலுடன் சுய ஊக்கமுடைய ஒருவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு 11**

கணனி எழுத்தறிவு அத்தியாவசியமாகும்.

**குறிப்பு 111**

எழுத்து மற்றும் / அல்லது செயன்முறை மற்றும் நேர்முக பரீட்சையின் மூலம் தெரிவு செய்தல் நடைபெறும்.

**வயதெல்லை**

45 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச துறை அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல.)

இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் மற்றும் அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் **பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்), மனிதவளப் பகுதி – நிறைவேற்றுப் பிரிவு, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13"** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக 2026.07.14 ஆம் திகதிக்கு முன்னர் **பதிவுத் தபாலில்** அனுப்பப்படுதல் வேண்டும். **விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.**

**<u>சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.</u>**

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்களை அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**